பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 09 2026 THURSDAY 6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** சமையல் எண்ணெய் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், அதற்கான இறக்குமதி வரியை மத்திய அரசு கணிசமாக குறைத்துள்ளது.

**2)** இந்திய கடல் பகுதிகளில் கிடைக்கும் சூரை உள்ளிட்ட எந்தவகை மீனிலும் கிருமி தொற்று இல்லை என்று மத்திய கடல்சார் மீன் ஆராய்ச்சி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

**3)** காவிரியில் வினாடிக்கு **4** ஆயிரம் கனஅடிவீதம் **15** நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட காவிரி மேலாண்மை ஆணையம், கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது

**4)** அனைத்து அரசுப்பள்ளிகளில் உள்ள சமையல் அறைகளை போர்க்கால அடிப்படையில் ஆய்வு செய்து, உணவு பாதுகாப்பை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5)** **Baku** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>

சமையல் எண்ணெய் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில், அதற்கான இறக்குமதி வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நுகர்வோர் மற்றும் பொது விநியோகத்திட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கச்சா சூரியகாந்தி எண்ணெய்க்கு விதிக்கப்பட்டிருந்த 10 சதவீத வரி முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாமாயிலுக்கான வரி 10 சதவீதத்தில் இருந்து ஐந்து சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் வகைகளுக்கான இறக்குமதி வரி வித்தியாசத்தை 19 புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக மாற்றியமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு நடவடிக்கையை அடுத்து இதன் பயன் நுகர்வோருக்கு சென்றடையும் வகையில், சில்லரை விற்பனையிலும் வரி குறைப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

இந்திய கடல் பகுதிகளில் கிடைக்கும் சூரை உள்ளிட்ட எந்தவகை மீனிலும் கிருமி தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய கடல்சார் மீன் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய கடல்பகுதியில் உள்ள மீன்களை ஆய்வு செய்ததில் மக்கள் நுகர்வுக்காக பயன்படுத்தப்படும் எந்தவகை மீனிலும் கிருமித் தொற்று இருப்பது உறுதி செய்யப்படவில்லை என்றும், எனவே, இதுகுறித்து அச்சமடையத் தேவையில்லை என்றும் கூறியுள்ளது.

இவ்வகை மீன்களை உள்நாட்டு நுகர்வுக்கோ அல்லது ஏற்றுமதிக்கோ பயன்படுத்துவதில் எவ்வித தடையும் இல்லை என்றும் அந்த நிறுவனம் தெளிவு படுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>

காவிரியில் வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் திறந்துவிட காவிரி மேலாண்மை ஆணையம், கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு எஸ் கே ஹல்தர் தலைமையில் காணொலி வாயிலாக இன்று நடைபெற்ற

ஆணையத்தின் 58-ஆவது கூட்டத்தில் 15 நாட்களுக்கு கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் நீர்வளத்துறை செயலர் திரு பிரசாந்த் எம் வடநரே இதில் கலந்துகொண்டார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் துணைவேந்தர் இல்லாத பல்கலைக்கழகங்களில் பொறுப்பு துணைவேந்தர்கள் நியமனம் செய்யப்பட உள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற கல்வி தொழில்நுட்ப கண்காட்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், 11 பல்கலைக்கழகங்களுக்கான பொறுப்பு துணைவேந்தர்கள் சிறப்பு குழுக்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் உள்ள இரண்டாம் நிலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 112 கல்லூரி முதல்வர்கள் ஒரே நேரத்தில் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் திரு விஸ்வநாதன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில், அனைத்து அரசுப்பள்ளிகளில் உள்ள சமையல் அறைகளை போர்க்கால அடிப்படையில் ஆய்வு செய்து, உணவு

பாதுகாப்பை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள மேலகண்டைப் பள்ளியில் காலை உணவில் பல்லி விழுந்து, **11** குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

சமையல் அறைகளின் அடிப்படை சுகாதார ஆய்வு மற்றும் தர பரிசோதனையை ஆளும் தவெக அரசு மேற்கொள்ளாமல் இருப்பது ஆட்சியில் உச்சக்கட்ட நிர்வாக சீர்கேட்டை வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

அலட்சியத்திற்கு காரணமான அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் சாதி பெயரில் உள்ள கிராமங்கள், குடியிருப்புப்பகுதிகள், தெருக்கள், சாலைகள் ஆகியவற்றை கண்டறிந்து, அந்த பெயர்களை நீக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு மாநில அரசு பிறப்பித்த உத்தரவு மீதான தடையை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீக்க உத்தரவிட்டிருப்பதை வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 51 Sec.)***

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் பனை விதைகள் நடும் பணியினை மாநில அமைச்சர் திரு ஆனந்த் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

சேலத்தில் 26 புதிய நகர பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

மதுரை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர் திரு தாரேஸ் அகமது தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

கடலூர் கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

சேலம் மாவட்டத்தில் உயர்கல்வியில் சேராத ஆயிரத்து 932 மாணவர்களையும் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஆட்சியர் திரு இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

------------------

வேலூரில் போஷான் அபியான் திட்டத்தின்கீழ், சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியை ஆட்சியர் திருமதி லீலா அலெக்ஸ் தொடங்கிவைத்தார்.

---------------

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின்கீழ், காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தூய்மைப்பணி மேற்கொண்டனர்.

-------------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் பாதுகாப்பு அமைச்சகத்தின், இந்திய பாதுகாப்பு உற்பத்தி மாநாடு இன்று தொடங்கியது.

----------------

அரியலூரில் பேரிடர் கால மீட்பு குறித்த ஒத்திகை நிகழ்ச்சி தீயணைப்புத்துறை சார்பில் நடைபெற்றது.

-------------------

திருப்பூரில் 17-ஆவது நூலிழை ஜவுளி தொடர்பான மூன்று நாள் கண்காட்சி இன்று தொடங்கியது.

-----------------

சென்னை கிண்டியில் வரும் 28-ஆம் தேதிமுதல் மூன்று நாட்கள் நடைபெறும் தொழில் முனைவோருக்கான மொபைல் போன் பழுதுநீக்கம் மற்றும் சேவைப்பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்ட 10-

ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பங்கேற்கலாம் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

-----------------

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு **12** ஆயிரத்து **400** கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Baku** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **7-6, 6-3** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Marcus Walters-**ஐ வென்றார்.

----------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 6-3** என்ற செட் கணக்கில், ஆஸ்திரியாவின் நிக்லசை வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில், **Chirag Duhan**-னும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

இந்தியா ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று, **363** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடி வரும் ஆஸ்திரேலியா-ஏ அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் **2** விக்கெட் இழப்பிற்கு **55** ரன் எடுத்துள்ளது.

புதுச்சேரியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் **334** ரன்னும், இரண்டாவது இன்னிங்சில் **199** ரன்னும் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலியா ஏ அணி முதல் இன்னிங்சில் **171** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

---------

ஆசிய விளையாட்டுப் போட்டியின் துடுப்பு படகு ஆடவர் இரட்டையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற **Satnam Singh, Salman Khan** ஆகியோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இப்போட்டியின் **Wushu** பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற **Roshibina Devi-**க்கும், பேட்மிண்டன் ஆடவர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர்களுக்கும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**<<<<<<<<END>>>>>>**